


திருப்பூர் மத்திய மாவட்ட கழக செயலாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் மகள், திருப்பூர் வடக்கு மாநகர மாணவரணி அமைப்பாளர் செ.திலகராஜ் சகோதரி செ.செந்தமிழ் சா.யோகேஸ் கண்ணா திருமண விழாவில் கழக துணை பொதுச் செயலாளர், ஒன்றிய முன்னாள் அமைச்சர் ஆ.இராசா எம்.பி., தமிழ் வளர்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன், கோவை மாநகர் மாவட்டக் கழக செயலாளர், சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக், திருப்பூர் வடக்கு மாவட்ட கழகப் பொறுப்பாளர் மாநகராட்சி மேயர் நா.தினேஷ்குமார், திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர், மண்டலத் தலைவர் இல.பத்மநாபன், திருப்பூர் தெற்கு மாநகர கழக செயலாளர் டிகேடி மு.நாகராசன், திருப்பூர் வடக்கு மாநகர பொறுப்பாளர் ஈ.தங்கராஜ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



முத்தமிழறிஞர், செம்மொழி நாயகர், கலைஞர் அவர்களின் 102வது பிறந்த நாள் விழா கோவை வடக்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் கோவைக்கு குடிநீர் வழங்கும் சிறுவாணி திட்டம் தந்த தலைவர் கலைஞர் அவர்களின் புகழை போற்றும் வகையில் “சாடிவயல் சிறுவாணி நீர் சுத்திகரிப்பு நிலையத்தில்” அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாவட்ட கழகச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி தலைமையில் மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தினர். இதில் கணபதி ராஜ்குமார் எம்.பி., மாநகராட்சி மேயர் ரங்கநாயகி ராமச்சந்திரன், கழக மாணவரணி செயலாளர் இரா.ராஜீவ்காந்தி, ப.அருண்குமார், துணை மேயர் வெற்றிச்செல்வன், புருஷோத்தமன், அசோக் பாபு, ஜெயந்தி, அப்துல் ரகுமான், டி.ஆர்.சண்முகசுந்தரம், டிபி.சுப்பிரமணியன், சோமு சந்தோஷ், சாமிபையன், குருபுத்திரன், தொகுதி பார்வையாளர்கள் ராதாகிருஷ்ணன் (தொண்டாமுத்தூர்), மு.ஜெயக்குமார் (மேட்டுப்பாளையம்) உள்பட பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் மாவட்ட அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள் பலர் கலந்து கொண்டனர்.

### ஆயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட

# திருக்கோயில்களின் திருப்பணிக்கு ரூ.425 கோடி அரசு மானியம்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

சென்னை, ஜூன் 10-

ஆயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட திருக்கோயில்களின் திருப்பணிக்கு ரூ. 425 கோடி அரசு மானியமாக வழங்கப்பட்டுள்ளது என இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு தெரிவித்தார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (08.06.2025) சென்னை, சூளை, அகண்டதண்டு மாரியம்மன் திருக்கோயில் திருக்குடமுழுக்கு நன்னீராட்டுப் பெருவிழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

முதலமைச்சர் அவர்கள் தலைமையான திராவிட மாடல் ஆட்சி பொறுப்பேற்ற பின் இந்து சமய அறநிலையத்துறையில் பல்வேறு திருப்பணிகளும், குடமுழுக்குகளும், பக்தர்களுக்கான வசதிகளை மேம்படுத்தி வழங்கிடும் பணிகளும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

**திருக்கோயில் நிலங்கள் அளவீடு!**

அந்த வகையில் இந்த அரசு பொறுப்பேற்ற நாள் முதல் இன்று வரை 3,109 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடந்தேறி இருக்கின்றது. அதில் குறிப்பாக 117 முருகன் திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடைபெற்று உள்ளது. அதேபோல் நில மீட்பு என்று எடுத்துக் கொண்டால் 7683 கோடி ரூபாய் மதிப்பிலான 7597.77 ஏக்கர் நிலங்கள் மீட்கப்பட்டிருக்கின்றன. திருக்கோயில் நிலங்களை அளவீடு செய்து பாதுகாக்கும் பணி இரண்டு லட்சம் ஏக்கரை தாண்டி இருக்கின்றது.

இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு ரூ. 6,036.57 கோடி மதிப்பீட்டில் 26,300 திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இந்த அளவு என்பது திராவிட மாடல் ஆட்சியில் தான் குறிப்பாக இந்து சமய அறநிலையத் துறை 1959-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட பிறகு இவ்வளவு பெருந்தொகைக்கு பெருவாரியான பணிகள் மேற்கொள்வது இந்த நான்காண்டு ஆட்சியில் தான் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

உபயதாரர்கள் 10,861 பணிகளுக்கு சுமார் 1,361.66 கோடி ரூபாயை நிதியாக திருக்கோயில் திருப்பணிக்கு அளித்திருப்பதும் ஒரு வரலாற்று சிறப்புமிக்க நிகழ்வாகும். அந்த வகையில் இந்து சமய அறநிலைத்துறை ஒன்றியத்திலேயே சிறப்பாக செயல்படுகின்ற ஒரு மாநிலம் உண்டு என்றால் அது தமிழக முதல்வர் அவர்கள் தலைமையில் அமைந்திருக்கின்ற இந்த ஆட்சியில் தான் என்பதை பெருமிதத்தோடு கூறி க்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றோம்.

ஆயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட திருக்கோயில்கள் திருப்பணி என்பது இந்த ஆட்சியினுடைய ஒரு மைல்கல்லாக காட்சியளித்துக் கொண்டிருக்கிறது. இன்றோடு சேர்த்து ஆயிரம் ஆண்டுகள் மேற்பட்ட 59 திருக்கோயில்களில் இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு குடமுழுக்கு நடந்திருக்கிறது. இத்திருப்பணிக்கு அரசின் சார்பில் மட்டும் 425 கோடி ரூபாய் மானியமாக வழங்கப்பட்டு இருக்கிறது. துறையின் சார்பில் பொது நலநிதி 60 கோடி ரூபாயும், நன்கொடையாளர்கள் 120 கோடி ரூபாயும் வழங்கியுள்ளனர். சுமார் 600 கோடி ரூபாய் அளவிற்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு பழமையான திருக்கோயில்கள் திருப்பணி மேற்கொள்ளப்பட்டுள்ளன. இன்றைக்கு கூட ஆயிரம் ஆண்டுகள் பழமையான ராணிப்பேட்டை மாவட்டத்தில் வளவ நாதஸ்வரர் திருக்கோயில் குடமுழுக்கு நடைபெற்றுள்ளது. துறையின் இப்பயணம் மேலும் விரிவு படுத்தப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திராவிட மாடல் ஆட்சிக்கு எவ்வித பதற்றமோ, பயமோ இல்லை. திராவிட மாடல் ஆட்சி நாயகன் முதலமைச்சர் அவர்கள் தலைமையில் அமைந்திருக்கின்ற இந்த கூட்டணி வலுவோடும் பொலிவோடும் தெளிவோடும் இருக்கின்றது. பதட்டம் என்ற வார்த்தைக்கு அர்த்தம் தெரியாத ஒரு கூட்டணியாக இந்த கூட்டணி செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. பதட்டம் அவர்களிடத்தில் இருப்பதால்தான் ஒன்றிய அளவில் முக்கிய பதவியில் இருக்கின்ற அமித்ஷா போன்றவர்கள் கூட தமிழ் நாட்டிற்கு அவ்வப்போது வருகின்ற ஒரு நிலை ஏற்பட்டுள்ளது. எங்கள் முதல்வரை பார்த்து தான் ஒன்றியமே இன்று பதற்றத்தோடு இருக்கிறது என்பதற்கு அமித்ஷா அவர்களின் வருகையே ஒரு எடுத்துக்காட்டாகும்.

திருப்பரங்குன்றத்தில் நடைபெற உள்ள முருகன் மாநாடு அரசியல் கட்சி சார்ந்த ஒரு மாநாடு. இந்து சமய அறநிலையத்துறை நடத்திய மாநாடு தான் பக்தி மார்க்கமான மாநாடாகும். காஞ்சிபுரம் அருள்மிகு ஏகாம்பரநாதர் திருக்கோயில் பணி அது ஒரு சவாலான பணி. ராஜகோபுரமே விரிசல் விட்டு இருக்கின்ற நிலை அதை சரி செய்கின்ற பணிகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. இத்திருக்கோயிலில் ஆயிரம் கால் மண்டபம் ஒரு 16 ஆண்டுகளாக செயல்படாமல் இருந்ததை இந்த ஆட்சி வந்த பிறகுதான் பக்தர்களின் பயன்பாட்டிற்காக கொண்டு வந்திருக்கின்றோம். திருக்கோயிலுக்கு ஓரிரு நாட்களில் நேரடியாக ஆய்வுக்கு செல்ல இருக்கின்றோம். அனைத்து திருப்பணிகளின் நிலையை ஆய்வு செய்த பிறகு குடமுழுக்கத்திற்கான தேதியை அறிவிப்போம்.

**திறனற்ற எடப்பாடி ஆட்சி!**

கடந்த கால எடப்பாடி பழனிசாமி தலைமையில் இருந்த திறனற்ற ஆட்சிக்கு ஒரு திட்டத்தை சாட்சியாக வைக்க வேண்டுமென்றால் கிளாம்பாக்கம் பேருந்து நிலையம் தான் தான் ஒரு சாட்சியாகும். திட்டமிடல் இல்லாததால் அந்த கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தை வடிவமைத்ததன் காரணமாக அவர்கள் ஆட்சிக் காலத்திலேயே அதை செப்பனிட முடியவில்லை. இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு அதில் மேற்கொண்ட பணிகளை பட்டியலிட்டால் காலமும் நேரமும் போதாது. கிளாம்பாக்கத்தில் தேங்குகின்ற மழை நீர் வடிகால்கள் கூட அமைக்கப்படவில்லை. கிளாம்பாக்கத்திற்கும் அந்த ரயில் நிலையத்திற்கும் நடைபாதை கூட அமைக்கப்படவில்லை. கிளாம்பக்கத்தில் இருந்து வழி மார்க்கங்கள் கூட அமைக்கப்படவில்லை. பூங்காகளை மேம்படுத்தவில்லை. இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகுதான் பூங்காவை உருவாக்கினோம் நீரூற்று பூங்காவை உருவாக்கினோம்.

கிளாம்பாக்கம் பேருந்து ஏற்பட்ட பிறகு தான் ஸ்கைவாக் பணிகளை இப்போது மேற்கொண்டு இருக்கின்றோம். இப்படி எந்த பணியும் திட்டமிடப்படாததால் அந்த பேருந்து நிலைய பணிகள் முடங்கி இருந்ததை சீர் செய்கின்ற நோக்கோடு தமிழக முதல்வர் அவர்களின் ஆட்சி ஏற்பட்ட பிறகு தான் கிளாம்பாக்கம் பேருந்து நிலையம் முழுமையாக மக்கள் பயன்பாட்டிற்கு வந்தது.

சர்வதேச தரத்திற்கு இணையாக விமான நிலையங்களுக்கு இணையாக கிளாம்பாக்கம் பேருந்து நிலையம் உருவாக்கப்பட்டுள்ளது. சமீபத்தில் தொடர் விடுமுறையின் காரணமாக இரவு நேரத்தில் பயணிகள் அதிகமாக கூடியதால் இரவு நேர பயணிகளுக்கு போதுமான பேருந்து இல்லாத நிலையில் அவர்கள் ஒரு தர்ணாவிலே ஈடுபட்ட சூழ்நிலை. அதையும் முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்றவுடன் தேவையான பேருந்துகளை ஏற்பாடு செய்து அந்தப் பயணிகளின் திட்டமிட்ட பயணத்தையும் நிறைவேற்றி இருக்கின்றோம்.

மேலும் இந்த ஆட்சியில் எந்த விதமான தவறும் இல்லை என்பதால் போக்குவரத்து துறை சார்பிலும் அரசின் சார்பிலும் அன்றைக்கு ஏற்பட்ட நிலையை விரிவாக எடுத்துச் சொல்லி இருக்கின்றோம். பக்ரீத் பண்டிகையை தொடர்ந்து இந்த விடுமுறை நாட்களில் அதிக அளவு பயணிகள் பயணங்கள் மேற்கொண்ட போதிலும் போதுமான அளவிற்கு பேருந்து வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. இரவு நேரத்தில் கூட 200 நபர்களுக்கு பேருந்து இல்லை என்ற நிலையில் தான் இந்த பிரச்சனை நடந்தது. ஒரு மணி நேரத்திற்குள்ளாக அதையும் சரி செய்து அவர்களுடைய பயணத்தையும் இனிதாக்கிய அரசு இந்த அரசு. கிளாம்பாக்கம் பேருந்து நிலையம் வட சென்னை தென்சென்னை மக்களின் வரப்பிரசாதமாக இருக்கிறது என்பதை தாங்கிக் கொள்ள முடியா தவர்கள் இப்படிப்பட்ட சிறிய பிரச்சினை யைக் கூட பெரிதாக்க முயற்சிக்கின்றார்கள்.

இவ்வாறு அமைச்சர் பி.கே.சேகர்பாபு குறிப்பிட்டார்.

இந்நிகழ்ச்சியில் கே.எஸ். ரவிச்சந்திரன், அதிகாரிகள் ஐ.முல்லை, க. சிவகுமார், திருமதி ராஜேஸ்வரி ஸ்ரீதர் எம்.சி., பாபு, நித்தியகலா மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்தநாளை முன்னிட்டு பல்லடம் கிழக்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் அருள்புரம் பேருந்து நிறுத்தத்தில் ஒன்றியச் செயலாளர் நா.சோமசுந்தரம் தலைமையில் பொதுமக்களுக்கு அறுசுவை உணவு வழங்கினர். இதில் முருகன், சின்னப்பன், எஸ்.எம்.பழனிச்சாமி, பிரகாஷ், ரவி தண்டபாணி, சபரிநாதன், ஆர்.ஆர்.ரவி, கௌதம், சதீஷ், பிரகாஷ், மேனகா துரைசாமி, ஸ்ரீ சிவா, ரமேஷ், பிரபாகரன், மஞ்சுளா, காளியம்மாள், மகளிரணி அமைப்பாளர் ஜெயந்தி உள்பட மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள், கிளைக் கழகச் செயலாளர்கள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### புதுச்சேரி ஆர்.வி.ஜானகிராமன்

**ஜூன் 10 (2019)**



இளமைக் காலத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்ற தொடங்கி, தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் – உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்த இவர், பதினைந்து ஆண்டுகளுக்கும் மேலாக புதுச்சேரி மாநிலக் கழக அமைப்பாளராக பொறுப்பு வகித்து, மாநிலத்தில் கழகம் வளர பாடுபட்டவர்.

ஐந்து முறை நெல்லித்தோப்புத் தொகுதியில் தொடர்ந்து வெற்றி பெற்ற இவர், பொதுப்பணித் துறை அமைச்சராகவும் – எதிர்க்கட்சித் தலைவராகவும் பதவி வகித்தார். 1996ல் முதல்வராகி, மாநில முன்னேற்றத்திற்கு பாடுபட்டவர்.

2005ஆம் ஆண்டு தலைமைக் கழகத்தின் சார்பில் “அண்ணா விருது” பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களையும் முன்னெடுத்து நடத்தியதோடு, அதில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

“எளிமைக்கு இலக்கணம் தேடினால் திரும்பிய பக்கமெல்லாம் தெரிகிற உருவம் புதுவை ஆர்.வி. ஜானகிராமன் தான்” என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.

“புதுச்சேரி மாநிலத்தில் தொடர்ந்து இயக்கம் கம்பீரமாக நிற்கவும், திராவிட இயக்கத்தின் கொள்கை மாநிலத்தில் எங்கும் பரவவும் பாடுபட்டவர் – ஓடி ஓடி உழைத்தவர் திரு ஜானகிராமன்” என்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது இரங்கலில் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# நாகை மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் அறிக்கை!



நாகை, ஜூன். 10-

நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

நாகை மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் இன்று (10ம் தேதி) செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு நாகை மாவட்ட தி.மு.க. அலுவலக கூட்ட அரங்கில் மாவட்டக் கழக அவைத்தலைவர் ப.செல்வம் தலைமையில் நடைபெறுகிறது.

கூட்டத்தில் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் அனைவரும் கலந்து கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் : ஓரணியில் தமிழ்நாடு கழக உறுப்பினர் சேர்க்கை

கழக ஆக்கப் பணிகள்

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் டி.எம்.செல்வகணபதி எம்.பி. ஆலோசனை வழங்கினார்!



சேலம் மேற்கு மாவட்ட தி.மு.கழக அவசர செயற்குழுக் கூட்டம் நேற்று (09.06.2025 - திங்கட்கிழமை) மாலை 4.00 மணியளவில் மாவட்ட கழக அலுவலகம், **கலைஞர் மாளிகை", வீரபாண்டியார் அரங்கில்"**, மாவட்ட கழக அவைத் தலைவர் **பி.தங்கமுத்து** தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் டி.எம்.செல்வகணபதி எம்.பி. ஆலோசனை வழங்கினார்.

இக்கூட்டத்தில் தொகுதி பார்வையாளர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், இந்நாள்–முன்னாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், கழகத்தின் துணை அமைப்புகளான இளைஞர் அணி, மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி, மாணவர் அணி, தொண்டர் அணி, தொழிலாளர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, ஆதி திராவிடர் நலக்குழு, மீனவர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, வழக்கறிஞர் அணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவ அணி, சிறுபான்மையினர் நலஉரிமைப் பிரிவு, வர்த்தகர் அணி, தகவல் தொழில் நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி ஆகியவற்றின் மாவட்ட அமைப்பாளர்கள் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில் கழக உறுப்பினர்கள் சேர்க்கை குறித்து, கழக தலைவர், **தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்கள் சேலம் மேற்கு மாவட்டம், மேட்டூர் வருகை குறித்து. கழக ஆக்கப் பணிகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது.

**டி.எம்.செல்வகணபதி**
செயலாளர் - சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மும்பை த.மு. பொற்கோ

**ஜூன் 10 (2014)**



இளம்பருவத்திலேயே திராவிட இயக்கக் கொள்கையில் தீவிர ஈடுபாடு கொண்டு, திராவிடர் கழகத்தில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர்.

மும்பையில் தமிழர்கள் வாழும் பகுதிகளில் எல்லாம் சென்று கொள்கை வகுப்பு நடத்த உற்சாகத்தோடு உழைத்ததன் பயனாக மும்பைத் தமிழர்களின் நண்பராய், குடும்பத்தில் ஒருவராய் மதிக்கப்பட்டவர்.

1965ல் மகாராஷ்டிராவில் தமிழர்கள் தாக்கப்பட்டபோது,அவர்களுக்காக போராடியவர். அதேநேரத்தில் பால்தாக்கரே அவர்களுடன் நட்பு வைத்திருந்தவர். அதே பால்தாக்கரே, 2002ல் ஓர் விழாவில் ‘சமுதாயச் செம்மல்’ என்ற பட்டம் வழங்கி பாராட்டினார். ‘தமிழர் நல உரிமைக் கூட்டமைப்பு’, ‘தென்னகப் பயனாளிகள் கூட்டமைப்பு’ ஆகிய அமைப்புகளை தொடங்கி, அதன் தலைவராக இருந்து மும்பைத் தமிழர்கள் நலனுக்காக பாடுபட்டவர்.

“த.மு. பொற்கோ அவர் மும்பை மாநகரச் செயலாளராகப் பணியாற்றிய காலத்தில், என்னை அழைத்து பல நிகழ்ச்சிகளை நடத்தியதும், கழகத்திற்காக தேர்தல் நிதி திரட்டிக் கொடுத்ததும் என் நினைவுக்கு வருகிறது” என்று தலைவர் கலைஞர் அவர்கள் தனது இரங்கலில் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**